(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 1(3).]**

# பாராளுமன்றத்தின்
# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2024 டிசம்பர் 20, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2025 ஜனவரி 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

132/2024

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மருத்துவமனையிலும் மருத்துவர், தாதியர், மற்றும் துணை மருத்துவச் சேவைகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) புத்தளம் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

145/2024

கௌரவ தேவானந்த சுரவீர,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நிதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மஹரகம கூட்டுறவு கிராமிய வங்கி மேற்படி வகைக்குள் உள்ளடங்குகின்றதா என்பதையும்;

(iii) மஹரகம கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் முறைகேடுகளால், வைப்பாளர்களின் பணத்தை மீளப் பெறமுடியாதுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்,

(iv) இப்பிரச்சினையை தீர்க்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

146/2024

கௌரவ அஜித் பி. பெரேரா, — பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க/ரமுக்கனை வித்யாலோக்க ஆரம்ப பாடசாலை அமைந்துள்ள நிலப்பரப்பில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்கு "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" கருத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக இது வரையில் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி புதிய பாடசாலையின் நிர்மாணத் திட்டத்திற்கு அமைவாக இன்றளவில் அதன் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நான்கு மாடிகளைக் கொண்ட பாடசாலைக் கட்டிடம் பாதியளவு மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது அதன் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் குவிக்கப்பட்டுள்ள கற்கள் மற்றும் சிதைவுப் பொருட்களை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையின் நிர்மாணக் கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

173/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 30 ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் யாது என்பதையும்;

(ii) விவசாயத் துறை, கைத்தொழில் துறை, மற்றும் சேவைத் துறையின் மீதான சார்ந்திருப்பை குறிப்பிட்டு அடுத்த 15 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான கணிப்பு யாது என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) துரித வளர்ச்சிக்காக அரசாங்கத்தினால் அடையாளங் காணப்பட்ட பத்து பிரதான துறைகள் யாவைதென்பதையும்;

(ii) அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இலங்கை ரூபாய் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் ஆகியவற்றில் உத்தேசிக்கப்பட்ட பெறுமதி உள்ளடங்கலாக உள்நாடு முதலீட்டாளர்களை அரசாங்கம் எந்தளவிற்கு கவனம் செலுத்த கட்டுப்படுத்த உத்தேசிக்கின்றது என்பதையும்;

(iii) அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இலங்கை ரூபாய் (SLR) மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD) ஆகியவற்றில் உத்தேசிக்கப்பட்ட பெறுமதி உள்ளடங்கலாக வெளிநாட்டு முதலீட்டாளர்களை அரசாங்கம் எந்தளவிற்கு கவனம் செலுத்த கட்டுப்படுத்த உத்தேசிக்கின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

181/2024

கௌரவ ரவீந்திர பண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுள் இன்றளவிலும் தற்காலிக வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் உறவினர்களின்/நண்பர்களின் வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்களுக்கு இது வரையில் மாற்று வீடுகள்/ காணிகள் கிடைக்காமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(v) எதிர்காலத்தில் இவ்வாறான பேரிடர் நிலைமைகளின்போது பின்பற்றப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

187/2024

கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் விலங்கு பண்ணைகளில் வளர்க்கப்படும் பன்றிகளிடையே பரவி வரும் தொற்று நோய் காரணமாக பன்றிகள் மரணமடைகின்றன என்பதையும்,

(ii) இதனால் சிறிய மற்றும் பெரிய அளவிலான விலங்குப் பண்ணைகளை முழுமையாக மூடிவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இந்நோய்க்குரிய தடுப்பூசி அல்லது ஔடதங்கள் இன்மையால் விலங்குகள் மரணமடைந்து வருவதால் உரிமையாளர்கள் பெரும் நட்டத்தை சந்தித்து வருகின்றனரென்பதையும்;

(iv) மேற்படி சம்பவத்தால் ஏற்பட்ட நட்டம்/பாதிப்புக்காக இவர்களுக்கு இழப்பீடு அல்லது நிவாரணம் வழங்கப்படுவதில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நோய் காரணமாக மரணமடையும் விலங்குகளுக்காக இழப்பீட்டை/கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இழப்பீட்டை/கொடுப்பனவை பெற்றுக்கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

236/2024

கௌரவ சட்டத்தரணி (செல்வி) லக்மாலி ஹேமச்சந்திர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவ வழங்கல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தரப்புகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லாமை மற்றும் உரிய முறையில் தரவுத்தளம் பராமரிக்கப்படாமை காரணமாக மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு மருந்துகளின் விலையும் அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளதென்பதையும்;

(ii) அந்த நிலைமை ஒட்டுமொத்த சுகாதாரக் கட்டமைப்பின் இருப்புக்கு சவாலாக மாறியுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அரச சுகாதாரக் கட்டமைப்பின் மருந்துக் கையிருப்பு முகாமைத்துவம் தொடர்பாக கணினி மென்பொருள் கட்டமைப்பொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது யாதென்பதையும்;

(iii) அக்கட்டமைப்பு தொடர்ந்து இற்றைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) மருந்துக் கொள்வனவுச் செயற்பாடு மற்றும் கையிருப்புகளை விநியோகிக்கும் செயற்பாடு அன்றாடம் மேற்பார்வை செய்யப்படுகின்றதா என்பதையும்;

(v) அதற்கான பொறுப்பை வகிக்கின்றவர்கள் யாவரென்பதையும்;

(vi) மேற்படி ஒட்டுமொத்தச் செயற்பாட்டில் அடையாளங் காணப்பட்டுள்ள முறைகேடுகளும் குறைபாடுகளும் யாவை என்பதையும்;

(vii) அவற்றை தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

238/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் மருந்து, சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்கள், ஆய்வுக் கூடப் பரிசோதனைக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் எதிர்வினைப்பு எக்ஸ்-கதிர் போன்ற கதிரியக்க பரிசோதனைகளை மேற்கொள்ளத் தேவையான உபகரணங்களின் தட்டுப்பாடு நிலவுவதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகள் மற்றும் உபகரணங்களில் தற்போது கையிருப்பில் உள்ள மருந்துகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் தட்டுப்பாடு காணப்படுகின்ற மருந்துகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய அறிக்கையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) 2025 ஆம் ஆண்டின் இறுதி வரையில் மேற்படி மருந்துகள் மற்றும் உபகரணங்களை தொடர்ச்சியாக வழங்க வகுத்துள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) யாதேனும் மருந்து அல்லது உபகரண தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட மருந்து அல்லது உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கும் அவை கையிருப்பிலின்மையால் ஏற்படக்கூடிய இடர்வரு நிலையை தவிர்ப்பதற்கும் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

242/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிருலப்பனை சந்தியூடாக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மேம்பாலத்தை எதிர்காலத்தில் நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த மேம்பாலம் எக்காலப்பகுதியில் நிர்மாணிக்கப்படும் என்பதையும்;

(iii) அதற்குத் தேவையான நிதி தேசிய ரீதியாக பெற்றுக்கொள்ளப்படுமா அல்லது சர்வதேச ரீதியாக பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

251/2024

கௌரவ அஜித் கிஹான்,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதிவாதிகளை இதுவரையில் சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு முடியாது போயுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி உட்பட பிரதிவாதிகளை மிக விரைவில் சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என காதினல் ஆண்டகை தலைமையிலான கத்தோலிக்க திருச்சபை மற்றும் ஏனைய சமயத் தலைவர்கள் எதிர்ப்பார்க்கின்றனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி தாக்குதலுடன் தொடர்புடைய பிரதிவாதிகளை சட்டத்தின் முன் கொண்டு வருதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, மேற்படி தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் கொழும்பு வெஸ்ட் இன்டர்நெசனல் டேர்மினல் (பிறைவட்) லிமிட்டெட் தொடர்பில் அப்போதைய முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 செப்தெம்பர் 10 ஆம் திகதிய 2401/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2025 ஜனவரி 07, செவ்வாய்க்கிழமை)**

128/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி, மெததும்பர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாபேரியதென்னயில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள / சுவீகரிக்கப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகளிலுள்ள அரசாங்க பெருந்தோட்டக் காணிகளின் அளவும் தனியாருக்குரிய பெருந்தோட்டக் காணிகளின் அளவும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட காணிகளிலுள்ள தனியார் வீடுகள், கைத்தொழிற்சாலைகள், தோட்டப் பாடசாலைகள் மற்றும் பொதுச்சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்காகக் காணிகளைச் சுவீகரிக்கும்போது தனிநபர்கள் தங்களது வீடுகளை இழப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவ்வாறு வீடுகளை இழக்கும் ஒவ்வொரு தனிநபரினதும் பெயர் மற்றும் முகவரி தனித்தனியாக யாதென்பதையும்;

(v) வீடுகளை இழக்கும் நபர்களை மீள்குடியேற்றும் செயன்முறை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள கொள்கைசார் முடிவுகள் மற்றும் மாற்று யோசனைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜனவரி 08, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2024

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேகப் பாதையுடன் தொடர்புடையதாக செயற்படுத்தப்பட்டுள்ள பல்வேறான கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் பெற்றுக்கொண்டுள்ள உள்நாட்டுக் கடன் தொகை, வெளிநாட்டுக் கடன் தொகை, அக்கடன்களை பெற்றுக் கொண்ட மூலங்கள், இது வரையில் செலவு செய்யப்பட்டுள்ள தொகை மற்றும் இதுவரையில் பயன்படுத்தப்படாதுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பில் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் யாவை;

(ii) அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

59/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள் உள்ளிட்ட மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர், சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஒரே பணியை நிறைவேற்றும் பல்வேறு நிறுவனங்களை ஒன்றிணைக்கும் ஒரு முன்மொழிவு கடந்தகாலத்தில் முன்மொழியப்பட்டிருந்ததை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அந்த முன்மொழிவின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

66/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று – வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவில் சட்ட விரோதமாக இல்மனைட் அகழ்வு மேற்கொள்ளப் படுகின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் குடிநீர் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படக்கூடுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், சட்ட விரோதமாக மேற்கொள்ளப்படும் இல்மனைட் அகழ்வுச் செயற்பாடுகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

79/2024

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கையில் நெல் அறுவடை ஒவ்வொரு போகம் வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நெல் அறுவடையில் நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்த நெல்லின் அளவு ஒவ்வொரு போகம் வாரியாக சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(iii) நெல் சந்தைப்படுத்தல் சபையை பயன்படுத்தி நெல்லின் விலையை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

261/2024

கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்திலுள்ள, மாகாண சபைக்குச் சொந்தமான மருத்துவமனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த மாவட்டத்தில், மருத்துவமனை சேவை அல்லாத வேறு சுகாதார சேவைகளை வழங்கும் நிலையங்கள்/நிறுவனங்களை மாகாண சபை கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நிலையங்கள்/நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) களுத்துறை மாவட்டத்தில் காணப்படும் நிரல் அமைச்சுக்குச் சொந்தமான மருத்துவமனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அந்த மாவட்டத்தில், மருத்துவமனை சேவை அல்லாத வேறு சுகாதார சேவைகளை வழங்கும் நிலையங்கள்/நிறுவனங்களை நிரல் அமைச்சு கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நிலையங்கள்/நிறுவனங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(ii) மற்றும் (v)இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்கள்/நிறுவனங்களில் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜனவரி 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

87/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான வானொலி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிலையங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, மேற்படி ஒவ்வொரு நிலையமும் ஈட்டிய இலாபம்/நட்டம் ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி நிறுவனங்களை நட்டமடையாதவாறு கொண்டு நடத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

101/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.11.20 ஆம் திகதியளவில் குடிமனை மின் பாவனை மற்றும் வர்த்தக வகை மின் பாவனை ஆகிய ஒவ்வொன்றினதும் அடிப்படையில், ஒரு மின்சார அலகுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2024.10.21 ஆம் திகதி தொடக்கம் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மின் கட்டண திருத்தங்கள் குறித்த விபரங்கள் யாவையென்பதையும்,

(iii) இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தீர்மானங்கள்/ அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக அத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) மேற்படி ஆணைக்குழுவை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்சாரத்திற்கென நிலையான விலையைப் பேண நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நிலையான விலை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

109/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது தொழிற்படும் தனியார் மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய மின்னுற்பத்தி நிலையங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலைய உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஒவ்வோர் ஆண்டிலும் மேற்படி மின்னுற்பத்தி நிலையங்களின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின்னுற்பத்தி நிலைய உரிமையாளர்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் மிகவும் பாதகமானவையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

133/2024

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பில் விசாரணையிலுள்ள ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட குடியியல் வழக்குகள் மற்றும் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட குடியியல் வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) வழக்கு விசாரணைகளை நிறைவு செய்வதில் ஏற்படுகின்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

147/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" கருத்திட்டத்தின் கீழ் பண்டாரகம க/வேவிட்ட மைத்திரி மகா வித்தியாலயம் மற்றும் க/கிதெல்பிட்டிய ஸ்ரீ சாராலங்கார மகா வித்தியாலயம் ஆகிய வித்தியாலயங்களில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட கேட்போர் கூடத்துடன் கூடிய மூன்று மாடிக் கட்டிடங்கள் இரண்டினதும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கட்டிடத்தையும் நிர்மாணிப்பதற்கு இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை மற்றும் நிர்மாணப் பணிகளைப் பூர்த்திசெய்வதற்கு மேலும் தேவைப்படுகின்ற பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

174/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடந்த 5 வருடங்களாக அரச துறையிலும் தனியார் துறையிலும் உள்ள ஊழியப் படையை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கடந்த 10 வருடங்களில் அரச துறையின் நிரந்தர மற்றும் அமைய ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) கடந்த 10 வருடங்களில் அரச துறையின் ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் ஊதியங்களின் மொத்த நிதிச் செலவு யாதென்பதையும்;

(iv) கடந்த 10 வருடங்களில் செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையின் மொத்தத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு வருடாந்த அடிப்படையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் அடுத்த 10 வருடங்களுக்கு அரச துறையினதும் தனியார் துறையினதும் ஊழியப் படையின் முன்கணிப்பு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) அடுத்த 5 வருடங்களில் பணிக்கு உள்வாங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அடுத்த 10 வருடங்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஓய்வூதியச் செலவுத் தொகை யாதென்பதையும்;

(iv) அடுத்த 10 வருடங்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு வருடாந்த அடிப்படையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

182/2024

கௌரவ ரவீந்திர பண்டார,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை தேசிய மின் கட்டமைப்பிற்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்திலிருந்தும் பிறப்பாக்கம் செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் மின்சார கொள்ளளவு மற்றும் தற்போது பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சார கொள்ளளவு தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தி நிலையங்களில் புதுப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்திலிருந்தும் பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சார கொள்ளளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அடுத்த இரண்டு வருடங்களுக்குள் தேசிய மின் கட்டமைப்பை விருத்திசெய்வதற்கு வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) புதுப்பிக்கத்தக்க சக்தியை விருத்திசெய்வதற்கான திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

237/2024

கௌரவ சட்டத்தரணி (செல்வி) லக்மாலி ஹேமசந்திர,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொரியாவுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கை ஊழியர்களுக்கு வழங்கப்படும் வீசா வகைகள் யாவை என்பதையும்;

(ii) E8 வீசாவின் கீழ் இலங்கை ஊழியர்களை கொரிய அரசாங்க வேலைவாய்ப்புகளுக்காக அனுப்புவதற்கு கடந்த அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படை யாதென்பதையும்;

(iii) இதன் கீழ் கொரிய நாட்டிற்கு வேலைவாய்ப்புகளுக்காக சென்றுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்கள் இன்னலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வாறு இன்னலுக்கு உள்ளாகியுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) இவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொரியாவிற்கு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையர்கள் E8 வீசாவின் கீழ் மாத்திரமே அனுப்பி வைக்கப்படுகிறார்களா என்பதையும்;

(ii) ஏனைய வீசா வகைகள் உள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

239/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் ஏனைய பயிற்றுவிக்கப்பட்ட சுகாதாரத் துறையைச் சார்ந்த தொழில்வாண்மையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள் என்பதையும்;

(ii) அதன் காரணமாக இலங்கையின் சுகாதாரத் துறைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது இலங்கைச் சுகாதாரச் சேவையில் கடமையாற்றும்;

(ii) எதிர்காலத்தில் அரசாங்க சுகாதாரச் சேவையை முறையான சேவையாக முன்னெடுப்பதற்கு இருக்க வேண்டிய;

(iii) 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் வரை ஓய்வு பெறும் வயதை அடையாமல் சேவையிலிருந்து விலகிச் சென்ற;

(iv) நிபுணத்துவ பயிற்சி உட்பட பல்வேறு கல்வி சார் நிறுவனங்களில் தற்போது பயிற்சி பெற்று வருகின்ற;

வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவச் சேவை அலுவலர்கள் மற்றும் கனிஷ்ட நிலை அலுவலர்கள் ஆகியோரின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இவர்களைத் துரிதமாக சுகாதாரச் சேவையில் இணைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

247/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "COVID-19 சந்தேகத்திற்கிடமான மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்கான தற்காலிக சிகிச்சைக்குரிய நடைமுறை வழிகாட்டுதல்கள்" தொடர்பான வெளியீட்டினைப் பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெளியீட்டின் உள்ளடக்கத்திற்கும் விதப்புரைகளுக்கும் பங்களித்த துறைசார் வல்லுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்கள் துறைசார் வளவாளர்களாகப் பணியாற்றும் போது அவர்கள் இணைக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) அவர்களை நியமிப்பதற்குப் பொறுப்புடைய அதிகாரி யார் என்பதையும்;

(v) அவர்களைத் தெரிவு செய்வதற்குப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் அல்லது அடிப்படைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெளியீட்டின் பிரிவு 7 தொடர்பில் அவர் அறிந்திருக்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பிரிவின் உள்ளடக்கத்திற்கும் விதப்புரைகளுக்கும் பொறுப்பான குறிப்பிட்ட துறைசார் வல்லுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பிரிவு 7 இன் உள்ளடக்கத்தினையும் விதப்புரைகளினையும் உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட செயன்முறை, ஆவணங்கள் மற்றும் உசாத்துணைகள் என்பவற்றினை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) பிரிவு 7 இல் காணப்படும் விதப்புரைகள் உள்நாட்டு அல்லது சர்வதேச மருத்துவ நெறிகள் மற்றும் மருத்துவ மானுடவியல் துறையிலுள்ள நிபுணர்களின் தொழில்சார் அபிப்பிராயத்திற்கு உட்படுத்தப்பட்டதா;

என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2025 ஜனவரி 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4/2024

கௌரவ ஹேஷா விதானகே,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுதுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் உள்ளிட்ட மொத்த அரச நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்ற பாதுகாப்புக் கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(iii) அவற்றுள் அரச கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மேற்படி ஒவ்வொரு அரச நிறுவனத்தினதும் பாதுகாப்புச் சேவைக்காக தனியார் பாதுகாப்புக் கம்பனிகளுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்பை வழங்குவது தொடர்பான ஒப்பந்தங்களைப் பெறுகின்றபோது மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவை வழங்கும் செயற்பாட்டை அரசிற்குரிய பாதுகாப்புக் கம்பனிகளுக்கு வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

60/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் சட்டமாணி பட்டப்படிப்பை வழங்கும் அரச பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மேற்படி பல்கலைக்கழகங்களில் சட்டமாணி பட்டப்படிப்பை பூர்த்திசெய்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) வேறு சில பல்கலைக்கழகங்களிலும் சட்ட பீடங்களை நிறுவி சட்டக்கல்வியை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

67/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில், கோரளைப்பற்று – வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வாகரைப் பிரதேசத்தில் இறால் வளர்ப்பு மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் என்ற போர்வையில் சட்டவிரோதமாக காணிகளை கைப்பற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும்;

(ii) மேலும், ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புலுட்டுமானோடை பிரதேசத்திலும் சட்டவிரோதமாக காணிகளை கைப்பற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி காணிகளை கைப்பற்றும் விடயத்தை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

80/2024

கௌரவ ரோஹண பண்டார,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலய அலுவலகங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள நாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அலுவலகத்திலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டுச் சேவையில் இணைவதற்கு பூர்த்தி செய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தத் தகைமைகளை பூர்த்தி செய்யாமல், தற்போது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலய அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், பணிபுரியும் இடம் மற்றும் பதவி வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) அந்த ஊழியர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைத்து முறையான தகைமையுள்ள ஊழியர்களை வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலய அலுவலகங்களில் பணிபுரிவதற்கு அனுப்புவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

88/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மனித – யானை மோதல் காரணமாக உயிரிழந்துள்ள மனிதர்களினதும் யானைகளினதும் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்துக்கும் வனசீவராசிகள் வலயத்துக்கும் ஏற்ப தனித்தனியாக யாது;

(ii) மனித-யானை மோதலுக்கு நிரந்தர தீர்வினை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

102/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் நாட்டரிசி மற்றும் சம்பா அரிசி கிலோகிராமொன்றின் சந்தை விலை தனித்தனியே யாதென்பதையும்;

(ii) அரிசி விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்விலை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுகர்வோருக்கு தட்டுப்பாடின்றி அரிசியைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்து அரிசி கையிருப்பை பேணிச் செல்லுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கையிருப்புத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அரிசி இறக்குமதி தொடர்பான வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

110/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் தற்போது தொழிற்படும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிற்சாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கைத்தொழிற்சாலைகளிலும் உருவாக்கப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(v) புதிய கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள முதலீட்டாளர்கள் உள்ளார்களா என்பதையும்;

(vi) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

243/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கொழும்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு அலகுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு அடுக்குமாடிக் குடியிருப்பு மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி வீட்டு அலகுகளுள் இற்றைவரை உறுதி வழங்கப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உறுதி வழங்கப்படாத வீட்டு அலகுகளுக்கு உறுதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

249/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்- 19 காரணமாக இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வது தொடர்பில் ஆராய்வதற்கான “நிபுணர்கள் குழு” ஒன்றின் மூலம் சுகாதார அமைச்சின் கொள்கைத் தீர்மானம் தவறாக வழிநடத்தப்பட்டதாக 2022.11.29 அன்று சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சரினால் வெளியிடப்பட்ட கூற்றுடன் சுகாதார அமைச்சர் உடன்படுகின்றாரா? என்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவாக இருந்தால்;

(i) குறிப்பாக கொவிட்-19 காரணமாக மரணித்த உடல்களை அகற்றுவதற்கான அதன் விதப்புரைகளையும்;

(ii) நியமிக்கும் அதிகாரியையும்;

(iii) விசாரணை நியதிகள் மற்றும் /அல்லது ஆணையையும்;

(iv) உறுப்பினர்களின் பெயர்களையும் மற்றும் பதவிகளையும் ;

(v) தவிசாளரின் பெயரையும்;

(vi) அது கடைசியாகக் கூடிய திகதியையும்;

(vii) இடம்பெற்ற கூட்டங்களின் எண்ணிக்கையையும்;

(viii) கூட்டங்கள் நடைபெற்ற இடத்தையும்;

(ix) ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை வகித்த நபர்களின் பெயர்களை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

252/2024

கௌரவ அஜித் கிஹான்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் ஒரு கைத்தொழில் என்ற வகையில் இறால் வளர்ப்பு இன்றளவில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்பதையும்;

(ii) புத்தளம் மாவட்ட மக்களுக்கு குறித்த கைத்தொழில் மூலம் பாரிய பொருளாதார பலம் கிடைத்தது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.1/2024

கௌரவ ஹேஷா விதானகே,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.2/ 2024

கௌரவ ஹேஷா விதானகே,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2024

கௌரவ ஹேஷா விதானகே,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2024

கௌரவ ஹேஷா விதானகே,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2024

கௌரவ ஹேஷா விதானகே,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/ 2024

கௌரவ ஹேஷா விதானகே,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல்,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகள் தொடர்பில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போதும் இந்நாட்டின் சமூகத்திலும் உரையாடல் ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பொது மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகளுக்கு நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்த சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல், அகற்றுதல் அல்லது அது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல உறுப்பினர்களிடமிருந்தும் நியாயமான பதிலை பாராளுமன்றத்தில் விவாதித்துப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.11/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யும் செயல்முறைக்கு முறையான பெறுகை வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராமிய மக்களுக்கு மிகவும் நெருக்கமான இயக்கமாகிய கூட்டுறவு இயக்கமானது இன்றளவில் பல்வேறான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள காரணத்தினால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்யும் செயல்முறைக்கு அரசாங்கம் முறையான பெறுகை வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.12/2024

கௌரவ ரோஹண பண்டார,— அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்தின் போது அரச துறையின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்கின்ற செயல்முறையானது ஒரு சிலரின் கைகளில் உள்ள நிலையில் மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்ற காரணத்தினால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக அரச துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.13/2024

கௌரவ ரோஹண பண்டார,— அரசாங்கம் வசம் அரிசி கையிருப்பினை பேணிச் செல்வதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— தற்போது இலங்கையின் அரிசி சந்தை தனியார் துறையைச் சார்ந்த சில வர்த்தகர்களின் பிடியில் சிக்கியிருப்பதால் சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் வசம் அரிசி கையிருப்பினை பேணிச் செல்வதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.14/2024

கௌரவ ரோஹண பண்டார,— கிராமிய கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பை உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— மக்களுக்கு மிக நெருக்கமான பல கிராமிய கூட்டுறவு வங்கிகள் கடந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் அதன் வைப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அவ்வங்கிகளை அரசாங்கம் உரிய முறையில் மேற்பார்வை செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழிலாளர் நலன்புரி அலுவலர்களை நியமனஞ் செய்வதற்கு பொருத்தமான முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொருளாதாரத்திற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கி வரும் புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பினை வகிக்கும் தொழிலாளர் நலன்புரி அலுவலர்களை நியமனஞ் செய்யும் போது, பொருத்தமான முறையியல்கள் இதுவரை பின்பற்றப்படாததன் காரணமாக பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளமையால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் பொருத்தமான முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.19/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் நிகழும் பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பான விடயங்கள் கணக்காய்வறிக்கைகள் ஊடாக வெளிப்படுத்தப்படுவதால், அரச நிறுவனங்களில் அவ்வாறான ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும் பொருட்டு அவ்வறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரித்தல்,— இலங்கையின் தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் திட்டத்தை நீக்குதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியம் பெறுவதற்கு இலங்கை வாக்காளர்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள் என்பது வெளிப்படையாக இருப்பதன் காரணமாக உடனடியாகச் செயலூக்கம் பெறும் வகையில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் திட்டம் நீக்கப்பட வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 25/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வதற்கு வீடு ஒன்றை வழங்குதல்,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் வாழ்வதற்கான வீடு ஒன்றிற்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும் என்ற காரணத்தால் பிரதான குடியிருப்பாளரின் உடற் பாதுகாப்பு, பௌதீகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக வீடு ஒன்றை வாங்குவதற்கு, கட்டுவதற்கு அல்லது வாடகைக்குப் பெறுவதற்கு அவரை வலுவூட்டுவதன் மூலம் அவருக்கு வசதிசெய்து கொடுத்தல் அவசியமாகும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 27/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒவ்வொரு இளைஞரையும் போதுமான வருமானத்தை ஈட்டும் தொழிலைக் கொண்டிருக்கும் ஆளாக அல்லது சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுதல்,— 18 வயதை அடைந்த ஒவ்வொரு இளைஞருக்கும் போதிய வருமானமீட்டும் தொழிலைக் கொண்டிருப்பதற்கான உரிமை இருக்க வேண்டும் அல்லது தொழில்புரியாது இருப்பின், சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான நிதியுதவி வழங்கப்படுதல் வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.28/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதைத் தவிர்த்து தகனம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்தல்,— கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கான இயலுமை உள்ளதென உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்த நிலையில் மேற்படி சடலங்களை நல்லடக்கம் செய்வதன் மூலம் நிலக்கீழ் நீரில் வைரஸ் கலப்பதற்கான அபாயம் காணப்படுவதாக 2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி சடலங்கள் உறவினர்களின் உடன்பாடின்றித் தகனம் செய்யப்பட்டதனாலும், பின்னர், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் செயற்பட்டமையானது சரியானதல்ல எனத் தெரிவித்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோரியதனாலும், இந்தத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது சமய ரீதியான இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கோ அல்லது குறித்த சடலங்களைப் பார்வையிடுவதற்கோ சந்தர்ப்பம் இழக்கச் செய்யப்பட்டதனாலும், இது தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புகளும் அழுத்தங்களும் காரணமாக தகனம் செய்வதற்குப் பதிலாக மட்டக்களப்பு ஓட்டமாவடி, மஜ்மா நகர் எனும் தனிமையான பிரதேசத்தில் மேற்படி சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டதனால் உயிரிழந்தவர்கள் தொடர்பாக நிறைவேற்ற வேண்டியிருந்த சமயச் சடங்குகள் மற்றும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்கான உரிமையை உறவினர்கள் இழந்ததனாலும், உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவினருக்கு நியாயத்தை நிலைநாட்ட வேண்டியதன் தேவைப்பாடு மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கத் தரப்பினர் இழைத்துள்ள மேற்படி பாரதூரமான தவறுகளை விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.